முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.21.04.2026

O.S. No. 91/2024

வா.சா-1 ராஜமோகன்

1,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்தின் விஸ்தீரண்ம் 1 ஏர் என்றாலும் அதன் ரீசர்வே எண். 18/3 எ என்றாலும் சரி. சர்வே எண்.18/3 ல் 6.5 ஏர்ஸ் இருந்தது என்றால் சரி. அதில் 5.5 ஏர்ஸ்இடத்தை நான்கு வழிசாலைக்காக அரசால் நிலஆர்ஜிதம் செய்யபட்டது என்றால் சரி. அந்த நிலஆர்ஜிதத்திற்கு நாங்கள் ஆட்சேபனை ஏதும் செய்யவில்லை என்றால் சரி. அதற்கான நஷ்டஈட்டு தொகை யை அந்த காலகட்டத்தில் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எல்லோருக்கும் வந்தபோது எனக்கும்வந்தது. நஷ்டஈட்டுதொகையை வைப்பீடு செய்யபட்டு பல காலங்கள் கழித்து தான் நான் வாங்கினேன் என்றால் சரியல்ல. 18/3 என்பது 3 எ 1 ஏர் எனக்கும் 3 பி நிலஆர்ஜிதம் செய்த சொத்தாகவும் பிரிக்கபட்டது என்றால் சரி.

உட்பிரிவுக்கு பின்பாக 18/3 என்ற சர்வே எண் இல்லை என்றால் சரி. தாவா சொத்தின் 4 பக்க எல்கையில் தெற்கும் மேற்கும் 18/3 நிலம் என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் அது 18/3 பி என்று வரவேண்டும் நான் தவறாக குறிப்பிட்டுள்ளேன். ஆர்ஜிதம் செய்யபட்ட இடத்தில் நான்குவழி சாலையில் சேரகூடிய அணுகுசாலை உள்ளது என்றால் சரி. தாவா சொத்தில் என்ன உள்ளது என்றால் ரோடு உள்ளது. வீடோ மரங்களோ இல்லை. தாவா சொத்தின் மேற்கு பக்கம் ரோடு செல்கிறது. நான்குவழி சாலையின் கிழக்குஅற்றம் தாவா சொத்தின் அருகே கழிவுநீர் ஓடை கட்டபட்டுள்ளதா என்றால் பூமியை தோண்டி மட்டும் உள்ளார்கள் எந்த பூச்சுவேலையும் நடக்கவில்லை. நிலம் ஆர்ஜிதம் செய்யபட்ட காலத்தில் ஆர்ஜிதம் செய்த பகுதிக்கு சர்வே கற்களை போட்டார்களா என்றால் இல்லை.

தாவா சொத்தின் 4 பக்க எல்கைகள் தெரியும். ஆட்கள் தெரியும் ஆனால் பெயர் தெரியாது. 3 பக்கத்தில் உள்ள சொத்தின் உரிமையாளர்களை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரி. எல்கைகல் இல்லாதது தொடர்பாக வருவாய்துறையில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.எல்லைகற்களை நிர்ணயம் செய்து கற்கள்போடுவதற்கு தனியாக துறை உள்ளது. அந்த துறையில் உரிய கட்டணம் செலுத்தி மனு செய்தால் சொத்தை அளவீடு செய்து கற்கள் போட்டு தருவார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் அவ்வாறு மனுதாக்கல் செய்து கட்டணம் செலுத்தாததால் எனக்கு எல்கை நிர்ணயம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வருவாய் வட்டாட்சியரிடம் நான் மனு கொடுத்தேனா என்றால் இல்லை தேசிய நெடுஞ்சாலை நிலஎடுப்பு வட்டாட்சியரிடம் கொடுத்தேன். 2ம் பிரதிக்கு நிலம் எடுப்பது மட்டுமே வேலை என்றாலும் எல்கை நிர்ணயம் செய்ய அவர்களுக்கு உரிமை இல்லை என்றாலும் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் வட்டாட்சியரையோ சர்வேயரையோ கட்சி சேர்க்கவில்லை என்றால் சரி. 1,4 பிரதிகள் நெடுஞ்சாலையின் உரிமையாளர்கள் என்றாலும் அவர்கள் எல்லை நிர்ணயம் செய்யும் பணியை செய்ய முடியாது என்றாலும் சரியல்ல. நான் கொடுத்த மனுவை வருவாய் வட்டாட்சியருக்கு அனுப்பினார் என்றால் சரியல்ல நிலஎடுப்பு வட்டாட்சியருக்கு தான் கொடுக்கபட்டது.

உண்மையில் நிலஆர்ஜிதம் செய்த மீத இடத்திற்கு 4 எல்லைகள் நிர்ணயம் செய்து எல்லை கற்கள் போடப்பட்டது என்றாலும் இந்த வழக்கு தேவையற்றது என்றாலும் சரியல்ல.தாவாசொத் து என் கைவசம் இல்லை என்றால் சரி அது ரோட்டில் உ்ள்ளது அதில் வாகனங்கள் சென்று வருகிறது. தாவா சொத்தானது பக்கத்து நிலத்துகாரரின்

ஆக்கிரமிப்பில் உள்ளது என்றால் சரியல்ல. என்  கைவச அனுபவம் இல்லாத சொத்திற்கு எல்கை நிர்ணயம் செய்ய கேட்டிருப்பது தவறானது என்றால் சரியல்ல. எல்லை நிர்ணயம் செய்ய கேட்டிருக்கும் இந்த வழக்கில் 4 பக்க உரிமையாளர்கள் அவசிய தரப்பினர் என்றால் சரியல்ல. தாவா சொத்து என் கைவச உரிமையில் இல்லாததால் வருவாய்துறையினர் எல்லை நிர்ணயம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

எனது பிராதிலோ முதன்மை விசாரணையிலோ என் தாவா சொத்தை 1,4 பிரதிகள் ஆக்கிமிப்பு செய்து ரோடு அமைத்ததாக எங்கும் குறிப்பிடபடவில்லை என்றால்  சரியல்ல. 2013 நில ஆர்ஜித சட்டபடி நான் இழப்பீடு பெற்றேன் என்றால் சரி. அந்த சட்டத்தின் படி எல்லை நிர்ணயம் சம்மந்தமான பிரச்சனைக்கு மாவட்ட ஆட்சியரிடம் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றாலும் வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றாலும் சரியல்ல. 1,4 பிரதிகள் இந்த வழக்கில் தேவையற்ற தரப்பினர் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

(2,3,5 பிரதிகளின் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கபடுகிறது.)